# கிருபை மலர்

மலர் - 11
மார்ச் - 2020
இதழ் - 2

தனிப்பிரதி ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 100/-



# உங்கள் சகோதரியிடமிருந்து ....

## என் அன்பு கிருபை குடும்பத்தினரே!



ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் என்னுடைய மூத்த மகன் **Benedict Sam** அவர்களின் திருமணம் ஜனவரி 18ம் தேதி அன்று நடைபெற்றது. அன்பு மகள் **Priscilla Sophia**-வை வாழ்க்கைத் துணையாக தந்தார். அன்பு பிள்ளைகளின் குடும்ப வாழ்க்கைக்காக ஜெபியுங்கள். கர்த்தர் நாமம் மகிமைப்படுவதாக.

**வேதாகம புதையல்-V-க்கான** வினாத்தாள் ஆயத்தமாகி விட்டது. அதை பெற்றுக் கொள்ள விரும்பினால் பதிவு கட்டணம் ரூ.100/- யை செலுத்தி உங்கள் வினாத்தாளை முன் பதிவு செய்து கொள்ளுங்கள். அரசுத் தேர்வு எழுதுகின்ற அனைத்து பிள்ளைகளுக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தர் தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக.

மார்ச் மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். ஏப்ரல் மாதம் நடைபெற உள்ள **Kirubai Kids Camp** க்காக மறவாமல் ஜெபியுங்கள். **Kirubai Kids** உண்டியல் பெற்றவர்கள் ஏப்ரல் மாத முதல் வாரத்தில் எங்களுக்கு அனுப்பி தந்து ஊழியத்தினை தாங்கும்படி அன்புடன் கேட்கிறேன்.

**வெளிப்படுத்தின விசேஷத்தின்** தொடர் வேதபாட பகுதியை இம்மாத இதழில் வாசித்து ஆசீர்வாதம் பெறுங்கள். ஏழு என்ற எண்ணின் அடிப்படையில் தியானப் பகுதிகள் வெளிவந்துள்ளது.

**அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.** ஏசா 53:5.

கிறிஸ்துவின் பணியில் அன்பு சகோதரி,

சகோதரி. **ஷீலா விஜயகுமார்**

Bible Study - 19

# வெளிப்படுத்தின விசேஷம்



சகோ. ஷீலா விஜயகுமார்

**கிறிஸ்துவில் பிரியமானவர்களே!**

வேதபாட வகுப்பில் வெளிப்படுத்தின விசேஷத்தில் 11 அதிகாரங்களை தியானிக்க கர்த்தர் உதவி செய்திருக்கிறார். 12ம் அதிகாரத்தை இந்த இதழில் தியானிப்போம்.

முதல் 3½ ஆண்டுகளில் ஏழு முத்திரைகள் உடைக்கப்பட்டு விட்டன. ஆறு எக்காளங்களும் ஊதப்பட்டாயிற்று. 7ம் எக்காளம் சரியாக உபத்திரவ காலத்தின் மத்தியில் ஊதப்படுகிறது.

இந்த 12ம் அதிகாரத்தில் சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ யார்? தேவனிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அவளுடைய பிள்ளை யார்? வானத்தில் நடந்த யுத்தத்தின் பயங்கர விளைவு என்ன? என்பவைகளைத் தியானிக்க ஆவியானவர் தாமே உதவி செய்வாராக!

**12:1 அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது. ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள். அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன.**

வானத்திலே என்பது பரலோகத்திலே என்பதைக் குறிக்கிறது. சூரியனை அணிந்திருந்தாள் என்பது தேவப் பிரசன்னத்தைக் குறிக்கிறது.

### பாதங்களின் கீழே சந்திரன்

சூரியனிடம் இருந்து வெளிச்சத்தைப் பெற்று குறைந்த அளவில் பிரகாசிப்பதே சந்திரன். நீதியின் சூரியனாம் இயேசுவிடமிருந்து ஒளிப்பெற்று அதை வெளிப்படுத்துவதைக் குறிக்கிறது. சுயபெலத்துடன் அல்ல ; கிருபையை சார்ந்து நிற்கும் சபையைக் குறிக்கிறது என்கின்றனர்.

சிரசின்மேல் 12 நட்சத்திர கிரீடம் நட்சத்திரம் என்பது என்ன?

**அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்.** வெளி 1:20.



நட்சத்திரம் என்பது சபையைக் குறிக்கிறது. ஆகவே இந்த முதல் வசனம் எந்த ஸ்திரீயைப் பற்றியும் அல்ல. சபையைக் குறிக்கிறது.

**12:2 அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து பிள்ளைப் பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்.**



அரசியைப் போல முடிசூட்டப்பட்டவளாய் கிரீடத்தோடு காணப்பட்ட ஸ்திரீ இப்போது வேதனையோடு காணப்படுகிறாள். ஜெயங் கொள்ளும் திருச்சபை ஜெபத்தில் கட்டாயம் வேதனை அடையும். சாதாரண திருச்சபையானது அப்படிப்பட்ட வேதனையை அனுபவிக்காது. ஜெயங் கொள்ளும் சபை என்பதை பதிவு செய்கிறேன்.

**ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்.** ரோமர் 8:23.

**கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப் படுகிறேன்.** கலாத் 4:19.

தேவனுடைய சபையானது ஆத்துமாக்களுக்காக ஜெபத்தில் கர்ப்ப வேதனையடையும்.

**12:3 அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது. ஏழு தலைகளையும், பத்து கொம்புகளையும், தன் தலைகளின் மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது.**

வேறொரு அடையாளம் பரலோகத்திலே காணப்பட்டது. ஏழு தலைகள், 10 கொம்புகள், 7 முடிகள், நிறமோ சிவப்பு, இது சாத்தானின் தோற்றம் என்பது தெளிவாகிறது. 12:9 தான் இது சாத்தான் என உறுதிப்படுத்துகிறது. ஏழு தலைகள் என்பது பிசாசின் பூரண அறிவை விளக்குகிறது. கொம்புகள் வல்லமையை வெளிப்படுத்தும். அதாவது உலகை ஆளுகை செய்யும் ஆளுகையின் அதிகாரம்.

**இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.** 2 கொரி 4:4.

**இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவின் ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள்.** எபே 2:2.

இப்பிரபஞ்சத்தின் தேவன் ஆகாயத்து அதிகாரப் பிரபு என்பது சாத்தானைக் குறிப்பது. அவனுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்றை மறக்க வேண்டாம். அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆம் நம் தேவனே சர்வ வல்லமை நிறைந்தவர். அவரே அவனுக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறவர். அவர் அதிகாரத்தை கொடுத்தால் மட்டுமே அவர் கொடுக்கும் அந்த எல்லை வரை அவனால் செயல்பட முடியும்.

சிவப்பு நிறம் என்பது ஆதி முதல் அவன் மனுஷ கொலை பாதகன்

என்பதை தெளிவுபடுத்துகிறது. சிவப்புநிற இரத்தம் அவனுக்குப் பிடிக்கும். ஆகவே தான் சிவப்பு நிற ஆடையை குறிப்பிட்ட நாளில் ஜனங்களை அணிய வைத்து மகிழ்ச்சி அடைகிறான்.

இந்த சாத்தானின் கண்கள் எப்போதும் சபைக்கு எதிராகவே இருக்கிறது.

**12:4 அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கை இழுத்து அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று. பிரசவ வேதனைப்படுகிற அந்த ஸ்திரி பிள்ளை பெற்றவுடனே அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப் போடும் படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.**

**வானத்தின் நட்சத்திரங்களில்**

நட்சத்திரங்கள் என்பது கர்த்தருடைய ஊழியர்கள் (வெளி 1:20 வெளி 2:1, தானி 12:3) கர்த்தருடைய பரிசுத்தவான்கள் என்போரைக் குறிக்கிறது.

**அதின் வால்– சாத்தானின் வால்**

நட்சத்திரங்களில் (ஊழியரில், பரிசுத்தவான்களில்) மூன்றில் ஒரு பங்கை பூமியில் விழத்தட்டும் அளவு சாத்தானாகிய வலுசர்ப்பத்தின் வால் பெலமுடையது என்றால் ஆதி நாட்களில் அவன் மிகவும் பலமுள்ளதாய் இருந்திருப்பான் என்பதில் சந்தேகமில்லை.

**பொய்ப் போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசியே வால் ஏசா 9:15.**

பொய்ப் போதகம், கள்ளத்தீர்க்க தரிசனம் இவைகள் தான் வலுசர்ப்பத்தின் வால்கள். தன் பொய்ப் போதகத்தாலும், தன் பொய்த் தீர்க்கதரிசனத்தாலும் மூன்றில் ஒரு பங்கு ஊழியர், மற்றும் பரிசுத்தவான் –களை விழத்தள்ளுமாம்.

| மிகாவேல் | காபிரியேல் | லூசிபர் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| நம்மோடு நமக்காக இருப்பதோ 2/3 பங்கு நம்ம கட்சி 2/3 பங்கு எதிர்க்கட்சி 1/3 பங்கு | | இவனும் இவன் கூட்டமும் 1/3 பங்கு விழத் தள்ளப்பட்டனர் |

ஆகவே தான் நம்மோடிருக் கிறவர்கள் அதிகம் என்று வேதம் கற்றுக் கொடுத்து உங்களை உற்சாகப்படுத்துகிறது.

**12:2ல் நாம் பார்த்த ஸ்திரீ பிள்ளை பெற்ற உடனே அந்தப் பிள்ளையைப் பட்சிக்க சாத்தானாகிய வலுசர்ப்பம் அவளுக்கு முன் நின்றது.**

பிரசவ வேதனைப்பட்ட சூரியனை அணிந்த ஸ்திரீ ஒரு பிள்ளையைப் பெற்றாள். அந்த பிள்ளையைப் பட்சிக்க வலுசர்ப்பம் காணப்பட்டது. வலுசர்ப்பத்தின் முதல் எதிரி அந்த ஸ்திரீ அல்ல. அவள் குழந்தை என்பது தெளிவாகிறது.

**12:5,6 சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை**

**செய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள். அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது.**

ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப் போனாள். அங்கே ஆயிரத் திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது.

வலுசர்ப்பத்தின் நோக்கம் முழு சபை அல்ல. ஆண் பிள்ளையை



மட்டுமே பார்த்தது. ஜெயம் கொள்ளும் பரிசுத்தவானை அது குறிப்பிடுகிறது. ஆம்; ஜெயங் கொள்வோர் மீதே வலுசர்ப்பத்தின் பார்வை இருக்கிறது. மற்றவர்கள் பக்கம் இல்லை.

அந்தப் பிள்ளை எடுத்துக் கொள்ளப்பட்டது. பெயரளவில் உள்ள சபை அல்ல ; உண்மையான தேவனுடைய சபை பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

அநேக ஜனங்கள் இரட்சிக்கப் பட்டாலும், ஞானஸ்நானம் பெற்றாலும், பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டாலும் இரகசிய வருகையில் எல்லாரும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. பக்தன் ஒருவர் இவ்விதமாய் கூறுகிறார்.

ஆட்டுக்குட்டியானவருக்குத் தேவை ஆட்டுக்குட்டியான மணவாட்டியே.



புலி, சிங்கம் தேவையில்லை. ஆம், அவர் சாயலை பிரதிபலிக்க விரும்பி, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி பிரயாசப்படும் நபரே மணவாட்டித் திருச்சபையின் அங்கத்தினர் ஆக முடியும்.

ஆண்பிள்ளை என்பது தனி மனிதனை அல்ல ; பூரணத்தை நோக்கி செல்லும் மணவாட்டி சபையைக் குறிக்கிறது. இரவும் பகலும் அவரை நோக்கிக் கூப்பிடுகிறவர்கள், வார்த்தையை தியானிப்போரின் கூட்டத்தைக் குறிக்கிறது.

## வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்

பின் தங்கிய விடப்பட்டுப்போன திருச்சபையை இது குறிக்கிறது. வனாந்தரம் என்பது குறிப்பிட்ட இடமோ, ஊரோ அல்ல. உலகைத் தான் குறிக்கிறது. கர்த்தரோடு உறவு கொள்ள முடியாத வனாந்தர வாழ்வை குறிக்கிறது. ஏனெனில் அது அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்குள் சிக்கித்தவிக்கும். கர்த்தரில்லா வாழ்வு வனாந்தர வாழ்வு தானே!

அடுத்த வசனத்திலிருந்து அடுத்த இதழில் சந்திப்போம். அதுவரை தேவகிருபை நம்மைத் தொடர்ந்து வழி நடத்துவதாக! ஆமென்!!

முதல் வார தியானம்

# 7 சபைகள்

கிறிஸ்து தம் வருகைக்கென்று சபைகளை ஆயத்தம் பண்ண விரும்பி சபைக்கான காரியங்களை வெளிப் படுத்தின விசேஷத்தில் அப்போஸ்தல னாகிய யோவான் மூலம் வெளிப் படுத்துகிறார். எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா ஆகிய ஏழு சபைகளுக்கு சொல்லப்பட்ட செய்தியை வெளி 23ம் அதிகாரங்களில் காணலாம்.

## 1. எபேசு சபை

எபேசு என்றால் பிரியமான என்று அர்த்தம். ஆங்கிலத்தில் desired one என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ரோமர் காலத்தில் ஆசியாவின் மிகப் பெரிய துறைமுகப்பட்டணம் இது. நல்ல கிரியை, பொறுமைக்காகப் பாராட்டுப் பெற்றவர்கள், பொல்லாத விஷயத்தை சகிக்காதவர்கள் 50,000 வெள்ளிக்காசு விலையுள்ள மாயவித்தை புத்தகங் களை அழித்துப்போட்ட சபை. ஆனாலும் ஆதி அன்பில் குறைவுபட்ட சபை.

## 2. சிமிர்னா சபை

சின்ன ஆசியாவிலிருந்த துறைமுகப்பட்டணம், நெருக்கப்பட்ட சபை, பாடுகளை அனுபவித்த சபை ஆவிக்குரிய வாழ்வில் ஐசுவர்ய வான்கள். சிமிர்னா அழகான கிரீடம் போல காட்சி தரும் நகரம். இச்சபையை உற்சாகப்படுத்த கர்த்தர் பாடுகளைக் குறித்து பயப்படாதே என்கிறார்.

## 3. பெர்கமு சபை

சின்ன ஆசியாவின் தலைநகரம். சரித்திரப் புகழ் வாய்ந்த நகரம். கல்விமான்கள் வாழ்ந்த நகரம். வியாபாரஸ்தலமும் கூட. விசுவாசத்தை மறுதலியாத சபை. இரத்த சாட்சியாய் மரிக்க நேரிட்ட போதும் தளரா விசுவாசத்தில் உறுதி காத்த சபை. கள்ளப் போதகத்துக்கு செவி சாய்க்காதே என்று எச்சரிக்கப்பட்ட சபை.

## 4. தியத்தீரா சபை

திறந்த வெளியில் இருந்த வியாபார ஸ்தலமான பட்டணம். இரத்தாம்பரத் தொழில் நடைபெற்ற இடம். லீதியாள் இவ்வூரைச் சார்ந்தவள். இந்த சபைக்கே நீண்ட கடிதம் வசனத்தைக் கேட்டவர்கள் மட்டும் அல்ல அதன்படி நடந்தவர்கள் யேசபேலின் போதனையிலிருந்து மனந்திரும்ப தவணை பெற்றவர்கள்.

## 5. சர்தை சபை

இரட்டைப்பட்டணம் என்ற பொருள் பெற்ற நகரம். பொன் விளையும் பூமி. தாதுக்கள் நிரம்பிக் கிடந்த இடம். செத்த சபை என்று எச்சரிப்புப் பெற்ற சபை. உயிருள்ளவனாய் இரு என்று ஆலோசனை பெற்ற சபை. ஆவிக்குரிய மரணம் அடைந்த சபை.

## 6. பிலதெல்பியா சபை

சகோதர சிநேகம் என்ற பொருளுடைய பெயர் பெற்றது. பாராட்டுப் பெற்ற சபை. கொஞ்ச பெலன் கர்த்தரின் நாமத்தை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு திறந்த வாசலைப் பெற்றுக் கொண்ட சபை. ஆசியா மைனரில் உள்ள சிறிய நகரம். ஏராளமாக திராட்சைப் பயிர் செய்யப்பட்ட நகரம். நில நடுக்கம் நிறைந்த நகரமும் கூட.

## 7. லவோதிக்கேயா சபை

மனிதர்களின் சத்தம் என்ற பொருளுடையது. முக்கிய வியாபார ஸ்தலம். கம்பளி ஆடை செய்வது முக்கியத் தொழில். மருந்துகளும் செய்யப்பட்டன. யூதர் அநேகர் இங்கு வாழ்ந்தனர். அனலுமல்ல ; குளிருமல் லாமல் இருந்த சபை. உலகில் ஐஸ்வர்யம், ஆவியிலோ தரித்திரம் என்ற நிலை. உலகக் கண் மருந்து தயாரித்தும், குருடரானவர்கள். கம்பளி ஆடை தயாரித்தும் நிர்வாணி எனப் பெயர் பெற்ற சபை.

இரண்டாம் வார தியானம்

# ஏழு வார்த்தைகள்

இயேசு கிறிஸ்து சிலுவையில் மொழிந்த வார்த்தைகள்

**முதலாம் வார்த்தை:** மன்னிப்பின் வார்த்தை ஜெப வார்த்தையும் கூட திட்டமிட்டு செய்தோரையும் மன்னிக்கக் கற்றுக் கொடுக்கும் வார்த்தை.

**அப்பொழுது இயேசு பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிக்கிறார்களே என்றார்.** லூக் 23:34.

**இரண்டாம் வார்த்தை:** கடைசி நிமிடத்தில் ஒரு கள்ளனை பாதாளத்தின் பிடிக்குத் தப்புவித்த வார்த்தை. மரணத்தின் விளிம்பில் நின்ற கள்ளன் வாழ்வு பெற்ற வார்த்தை. தவறுக்காக மனம் வருந்தி 'நினைத்தருளும்' என்று கேட்டவனுக்கு 'பரதீசியிலிருப்பாய்' என்று இன்ப அதிர்ச்சி தந்து ஏற்றுக் கொண்டவர்.

**இயேசு அவனை நோக்கி இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.** லூக் 23:43.

**மூன்றாம் வார்த்தை :** உறவை வெளிப்படுத்தி கடமை ஆற்றும் வார்த்தை. தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்ற கற்பனையை கனம் பண்ணியவர். இயேசுவின் மார்பில் சாய்ந்து ஆறுதல் பெற்றவனை மற்றொருவருக்கு ஆறுதல் செய்ய வைத்த வார்த்தை.

**"அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்த சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்.** யோவா 19:26,27.

**நான்காம் வார்த்தை :** பிதாவே என்று முதல் வார்த்தையில் அழைத்தவர் இப்பொழுது 'என் தேவனே' என்கிறார் தன் பிதாவிடம் இருந்து பிரிக்கப்பட்ட தன் தவிப்பை வெளிப்படுத்தின வார்த்தை. சொந்த ஜனம் கைவிட்ட போதும், சீஷர்கள் ஓடின போதும் தாங்கிக் கொண்ட தேவன் பிதா கைவிட்டதை தாங்க முடியாமல் கதறுகிறார்.

**"ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.** மத் 27:46.

**ஐந்தாம் வார்த்தை:** தாகத்தை வெளிப்படுத்திய வார்த்தை. சரீர தாகம் + ஆத்ம தாகம் வெளிப்பட்டது. தாகம் கொடியது. தாகத்தை அடக்க முடியாது. அநேகரின் சரீர, ஆத்ம தாகத்தை தீர்த்தவர் தன் தாகத்தை வெளிப்படுத்துகிறார்.

**அதன் பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார்** யோவா 19:28.

**ஆறாம் வார்த்தை :** கெம்பீரமாய் வெற்றி முழக்கமிட்ட வார்த்தை. எல்லாவற்றையும் நிறைவேற்றி முடிந்தது என்றார். இதன் பின் எதுவும் பேசவில்லை. தேவ சித்தத்தை நிறைவேற்றி முடித்தார். சாத்தானின் வல்லமையை அழித்து முடித்தார்.

**இயேசு காடியை வாங்கின பின்பு, முடிந்தது என்று சொல்லி,** யோவா 19:30.

**ஏழாம் வார்த்தை:** பிதாவே என்று ஆரம்பித்தவர் பிதாவே என்று முடிக்கிறார். உயிரை ஒப்புக் கொடுத்தார். எல்லாக் கிரியையும் செய்து முடித்த பின் ஆவியை பிதாவிடம் ஒப்படைக்கிறார்.

**இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்த மாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்.** லூக் 23:46.

மூன்றாம் வார தியானம்

# ஏழு ஜாதிகள்

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு கானான் நோக்கி பயணிக்கின்றனர். மோசே மீட்பின் தலைவன் ஆனார். கானானிலோ 7வித ஜாதிகள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களைத் துரத்தி இஸ்ரவேலர் கானானுக்குள் சேர வேண்டும். ஏத்தியர், கிர்காசியர், எமோரியர் கானானியர், பெரிசியர், ஏவிர், எபூசியர் என்ற ஏழு ஜாதிகளை துரத்துவேன் என்று கர்த்தர் வாக்குப் பண்ணினார்.

## 1. ஏத்தியர்

நோவாவின் மகனான காமின் சந்ததியில் வந்த கானானின் இரண்டாம் மகனே கேத் என்பவன். கேத் என்றால் பயங்கரமானவன் என்று பொருள். கேத்தின் சந்ததியாரே ஏத்தியர். இஸ்ரவேலர் கானான் தேசம் சென்ற பொழுது இந்த ஏத்தியர் மற்றக் கானானிய ஜாதிகளோடு சேர்ந்து இவர்களுக்கு விரோதமாய் இருந்தனர்.

## 2. கிர்காசியர்

இவர்களைப்பற்றி அதிகம் அறியப்படவில்லை. இவர்களும் கானானின் சந்ததியே. இவர்கள் முற்றிலும் அழிக்கப்பட வேண்டும் என்று மோசே கட்டளையிட்டார் விக்கிரக வழிபாடு செய்தனர். தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு பலியிட்டவர்கள்.

## 3. எமோரியர்

கானான் தேசத்தைப் பிடிக்கும் முன் அங்கே குடியிருந்த ஜாதிகளில் ஒன்று இவர்கள் மலை நாட்டுப் பகுதியில் குடியிருந்தனர். Amorites என அழைக்கப்படும் இவர்களை சீகோன் ஆட்சி செய்த போது இஸ்ரவேலரோடு யுத்தம் வந்து தோற்கடிக்கப்பட்டனர். அதன் பின் இந்த ஜாதியைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

## 4. கானானியர்

கீழ்நாட்டுப் பகுதியில் குடியிருந்தவர்கள் இஸ்ரவேலர் அல்ல. இவர்களின் பாஷையும் எபிரேய பாஷைக்கு ஒத்திருந்தது. நோவாவின் மகன் காம். காமின் சந்ததியே கானானியர்.

## 5. பெரிசியர்

வாக்குத்தத்த பூமியாகிய கானானில் பூர்வீகத்தில் குடியிருந்தவர்களே Perizzites எனப்படும் பெரிசியர் ஆவார். இவர்கள் ஒரு பழங்குடியினர்.

## 6. ஏவியர்

ஏபால் மற்றும் கெர்சீம் மலைக்கும் சுற்றிலும் குடியேறியிருந்தார்கள்.

## 7. எபூசியர்

நோவாவின் மகனாகிய காமின் சந்ததி கானானின் சந்ததிதான் எபூசியர். வேவு பார்க்கப் போன இஸ்ரவேலர் இந்த ஜாதியைப் பற்றியும் சொன்னார்கள். யாபீனோடு சேர்ந்து யோசுவாவுக்கு விரோதமாய் யுத்தம் செய்த பொழுது இவர்களுடைய ராஜாவும் கொல்லப்பட்டான்.

நான்காம் வார தியானம்

# 7 பண்டிகைகள்

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கென்று நியமித்து ஆசரித்த பண்டிகைகள் தான் இந்த 7 பண்டிகைகள்.

## 1. பஸ்கா பண்டிகை

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர் விடுதலையாக்கப்படும் பொழுது கொண்டாடப்பட்டது. அதை நினைவு கூர்ந்து தொடர்ந்து கொண்டாடப்பட்டது. கிறிஸ்து பஸ்கா ஆட்டுக் குட்டியாக வந்தது. தீர்க்கதரிசன நிறைவேறுதலாகும். நமது சொந்த வாழ்வில் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வது தனிப்பட்ட வாழ்வில் பஸ்காவின் நோக்கம் நிறைவேறுகிறது.

## 2. புளிப்பில்லா அப்பப் பண்டிகை

இஸ்ரவேல் ஜனங்கள் தாங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டதை நினைவுகூறும்படி அனுசரிக்கப்பட்டாலும், இப்பண்டிகை கர்த்தருடன் நல்ல உறவை ஐக்கியத்தை புதுப்பிக்க வேண்டிய நற்காரியத்தை ஏற்படுத்துகிறது. கர்த்தருக்காய் வேறு பிரிவதும், அர்ப்பணம் செய்வதையும் அடையாளப்படுத்துகிறது.

## 3. முதற்பலன் பண்டிகை

இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் நுழைந்த வுடன் ஏற்கனவே விளைந்தவைகளை புசிக்க ஆரம்பித்தார்கள். உடனே அது வரை பெய்த மன்னா நின்று போயிற்று. இதன்பின் இப்பண்டிகையை ஆசரித்தனர். முதல் பேரனைத்தும் கர்த்தருக்கு சொந்தம். நம் தசமபாகம் முதற்பலன் காணிக்கையாகும்.

## 4. பெந்தெகொஸ்த பண்டிகை

உற்சாகமூட்டும் பண்டிகை இது. முதற்பலன் பண்டிகைக்குப் பின் 50 நாள் கழித்து கொண்டாடப்படும். அந்நாளில் தேவ சமூகத்தில் கூடி தேவனை ஆராதித்து தொழுது கொள்வார்கள். மாபெரும் அறுவடை நடப்பது ஆகும். ஆத்தும ஆதாயமும், ஆவியின் கனியும் முக்கிய அறுவடையாகும்.

## 5. கூடாரப் பண்டிகை

எகிப்திலிருந்து விடுதலையான இஸ்வேலர் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தனர். கூடாரங்களில் தங்கினர். இதை நினைவுகூறுவதே இப்பண்டிகை. சாலமோன் ராஜா தான் கட்டிய ஆலயத்தின் பிரதிஷடை இப்பண்டிகை நாளில் அனுசரிக்கப்பட்டது. இப்பண்டிகை காலத்தில் கர்த்தருடைய பிள்ளைகளின் மனம் துதியினாலும், நன்றியாலும் நிறைந்திருக்கும்.

## 6. எக்காளங்களின் பண்டிகை

இப்பண்டிகை நாளிலே பாவ நிவாரண நாள் வருவதை எக்காள தொனி மூலம் அறிவிக்கப்படுகிறது. அது மகா பரிசுத்த நாள் எக்காள தொனியின் நோக்கமானது ஜனங்களை யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்தல் அடுத்ததாக பாளையத்தில் தங்கினோர் பிரயாணம் துவக்க எக்காளம் ஊதப்படும்.

## 7. பாவ நிவாரண பண்டிகை

இது மிக பாக்கியமான நாள். இது யாம்கிப்பூர் என இப்போது அழைக்கப்படுகிறது. இது பரிசுத்தப் பெருவிழா. இஸ்ரவேலர் தங்கள் வேலையை விட்டு ஓய்ந்து பாவ நிவாரண நாள் வேலையில் அமர்ந்திருக்க வேண்டும். உபவாசத்துடன் ஆசரிக்கப்படும் பண்டிகை.

# வேதாகம புதையல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசுவானவர் மாம்சத்தில், உலகில் வாழ்ந்த கடைசி நாட்களை நாம் அலசி பார்க்கிறோம்! இன்னும் நாம் தொடர்ந்து இப்பகுதிக்குள்ளாய் செல்வோமா!

இயேசுவானவர் தாம் பூமிக்கு வந்த நோக்கத்தை நிறைவேற்றின அந்த கடைசி நாட்களை, நாம் லெந்து நாட்கள் என்று திருச்சபைகளிலும் தியானிக்கிறோம்.

இயேசு மனுஷகுமாரனாக தம் சரீரத்தில் வந்தாரென்பது யோவான் 1:14 சொல்லுகிறது.'அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம் பண்ணினார்'. தேவன் இந்த உலகத்திற்கு மாம்சத்தில் வந்தார்,அவர் தான் இயேசு.

பாவிகள் தேவனை காண முடியாது, ஏனெனில் தேவனைக் கண்டவுடன் மரித்துப் போவார்கள். தேவன் நேரடியாக தன்னை மனிதனுக்கு காட்ட முடியாது.

எனவே, இயேசு இந்த உலகத்திற்கு மாம்சத்தில் வந்து, பல திருஷ்டாந்தங்களை காண்பித்தார், அவற்றை வைத்து நாம் தேவனை நம்ப முடியும்.

இயேசு ஒரு மனிதனாக நம்மைப் போலவே இருந்தார் என்று வேதாகமம் சொல்லுகிறது. மாற்கு3:20ல் வாசிப்பது என்னவெனில், 'பின்பு வீட்டுக்குப் போனார்கள். அங்கே அவர்கள் சாப்பிடுவதற்கும் சமயமில்லாத படிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடி வந்தார்கள். மத்தேயு8:24ல் சொல்லுகிறது, என்னவெனில், 'அப்பொழுது படகு அலைகளினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார்'.



எப்படி இயேசு தேவனுடைய குமாரனாயிருந்தும் பசியிலும், வேதனையிலும் இருக்க நேர்ந்ததைக் குறித்து சில மக்கள் ஆச்சரியப்பட்டனர். இயேசு மாம்சத்தில் இருந்ததினால் அந்த மாம்சம் எலும்புகளும், சரீரம் சேர்ந்து காணப்பட்டது. அதனால் அவர் சாப்பிடவும் உறங்கவும் செய்தார். மேலும் அவர் நம்மைப் போலவே வேதனையினால் அவதிப்பட்டார்.

அதனிமித்தமே, தான் அவர்

ஈட்டியால் குத்தப்படும் போது இரத்தமும் தண்ணீரும் அவருடைய சரீரத்திலிருந்து பீறிட்டு வந்தது. இந்த உண்மை, தேவகுமாரனாயிருந்த இயேசு இவ்வுலகில் மாம்ச சரீரத்தில் வெளிப்பட்டார் என்பதற்கு நிச்சயமான ஆதாரத்தை நமக்கு கொடுக்கிறது.

இரண்டாவதாக, தேவன் தாம் இருக்கிறது போல பூரணமான பரிசுத்தத்தில் தம்முடைய பிள்ளைகளும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆகையால் இயேசு சொல்லுகிறது என்னவெனில், 'நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்' (1பேதுரு 1:16); 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராய் இருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்'. மத் 5:48.

மேலும் இயேசுவானவர் நம்மை தன்னுடைய வார்த்தையால் உற்சாகப்படுத்திச் சொல்லுகிறதாவது, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (II பேதுரு 1:4) மற்றும் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது (பிலிப்பியர் 2:5).

இயேசுவானவர் இந்த உலகத்திற்கு மாம்சத்தில் வந்து தேவனுடைய சித்தத்தின்படி ஒரு ஊழியக்காரனாக தன்னுடைய வேலையை எல்லாம் செய்து நிறைவேற்றி விட்டார். இயேசு மேலும் தேவனுடைய வார்த்தையின்படி வாழ்ந்து எல்லாவிதமான சோதனைகளையும், கவலைகளையும் மேற்கொண்டதன் மூலமாக தேவனுடைய கற்பனையை அன்பினால் நிறைவேற்றினார்.

இயேசு நம்மைப் போல மனிதனாக இருந்த போதிலும், அவர் தேவனுடைய சித்தத்திற்கு இணங்கி எல்லா வேதனைகளையும் தன்னுடைய விருப்பத்தோடும், சுயகட்டுப்பாட்டோடும் சகித்து சிலுவையில் போராடாமலும், சத்தமிடாமலும் தன்னை அன்பின் தியாக பலியாக மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார். இயேசுவின் சிந்தையை நாம் கொண்டு தெய்வீகத் தன்மையில் நாம் நம்மை உருவாக்க வேண்டும்.



நாம் நம்முடைய பாவத் தன்மையை அதன் ஆசைகள், விருப்பங்களோடு சிலுவையில் அறைந்து ஆவிக்குரிய அன்புடையவர்களாய் ஊக்கமாய் ஜெபிக்க வேண்டும்.

தொடர்ந்து வரும் நாட்களில் சந்திப்போம்!

அதுவரை தேவகிருபை நம்மோடு இருப்பதாக!

இப்படிக்கு




# உம் ஞானத்திற்கு நன்றி

## (தேர்வு எழுதும் மாணவச் செல்வங்களுக்கு)

*எங்கள் அன்பின் பரலோகப் பிதாவே!*

இந்த அருமையான நாளுக்காக உமக்கு ஸ்தோத்திரம். பயப்படாதே! நான் உனக்குத் துணை நிற்கிறேன் (ஏசா 41:13) என்று எனக்கு வாக்குப்பண்ணியிருக்கிற படியால் நன்றி செலுத்துகிறேன்.



இன்றும் நான் எழுதப்போகின்ற .................. தேர்வுக்காக ஜெபிக்கிறேன்.

இயேசப்பா! ஞானம், அறிவு ஆகிய பொக்கிஷங்களெல்லாம் உமக்குள் அடங்கியிருக்கிறது என்று வேதம் சொல்கிறது. இயேசப்பா! எனக்கு உம்முடைய பொக்கிஷத்திலிருந்து எடுத்து விசேஷித்த ஞானத்தை, அறிவை, புத்தியை, ஞாபகசக்தியைத் தாரும். பலமுள்ளவனுக்காகிலும், பலனற்றவனுக்காகிலும் உதவி செய்வது உமக்கு இலேசான காரியம் என்று வேதத்தில் வாசிப்பது போல பெலனற்ற எனக்கு நீரே உதவி செய்யும் என்று கெஞ்சுகிறேன். என் பெலவீனத்தில் உமது பெலன் பூரணமாய் விளங்குவதற்காய் நன்றி செலுத்துகிறேன் (2 கொரி 12:9)

தேர்வு எழுதும் நேரத்தில் நான் படித்திருக்கும் எல்லாவற்றையும் எனக்கு ஞாபகத்தில் கொண்டு வாரும். பயத்தில் நான் மறந்து போகக்கூடாது. பயத்தை என்னை விட்டு புறம்பே தள்ளும். குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமானாலும், ஜெயம் கர்த்தரிடம் இருந்தல்லவா வருகிறது. தகப்பனே! ஜெயத்தை தாரும். உயர்ந்த மதிப்பெண்களைத் தாரும்.

தேர்வு நேரத்தில் பதறாமல், நிதானமாய் செயல்பட உதவி செய்யும். அழகான, தெளிவான கையெழுத்தைத் தாரும். விசேஷித்த கிருபையை என்மேல் ஊற்றும். குறித்த நேரத்திற்குள் எழுதி முடிக்க உதவி செய்யும். தேர்வு நேரத்தில் சரியாய் யோசிக்க உதவி செய்யும். என் விடைத்தாளைத் திருத்துகிறவர்களுக்கு என் கையெழுத்து புரியும்படி செய்யும். திருத்துகிறவர்களின் கண்களில் தயவைக் கட்டளையிடும்.


உமது இனிமையான பிரசன்னத்தை தேர்வு எழுதும் அறையிலும் நான் அனுபவிக்க உதவி செய்யும். ஒவ்வொரு நாளும் நான் தேர்வுக்காய் ஆயத்தமாகும் போது உமது ஒத்தாசையோடு படிக்கவும், எனக்கு இதுவரை புரியாமலிருந்ததைக் கூட இந்தக் கடைசி நேரத்தில் புரிந்து கொள்ளவும், மனதில் பதியவும் உதவி செய்யும்.

இயேசப்பா! என் சரீரத்தில் நல்ல ஆரோக்கியத்தைத் தாரும். கண் விழித்துப் படிக்கவும் உதவி செய்யும். வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவரிடத்தில் இருந்து எனக்கு ஒத்தாசை வரும் என்று நம்பிக்கையோடு எழுத உதவி செய்யும்.

தேர்வு முடிவுகளின் போது, நான் நினைக்கிறதை காட்டிலும் நான் வேண்டிக் கொண்டதைக் காட்டிலும் அதிக மதிப்பெண் பெற்று என் அன்பு இயேசப்பாவின் நாமத்தை உயர்த்தவும், மகிமைப்படுத்தவும் உதவி செய்யும். என் ஜெபத்தை கேட்டு எனக்கு நீர் பதில் கொடுப்பதற்காய் நன்றி செலுத்துகிறேன். கர்த்தரின் நாமம் தொடர்ந்து மகிமைப்படட்டும். எல்லா துதி, கனம், மகிமையையும் உமக்குக் செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், நல்ல பிதாவே! ஆமென்!




# செய்திகள்







1. கோவிட் 19 வைரஸால் சீனாவில் 2000 மேற்பட்டோர் மரணம்

2. சேலத்தில் நான்கு புதிய வகை பட்டாம் பூச்சிகள் மற்றும் புதிய வகை பறவை ஒன்றும் கண்டு பிடிப்பு.

3. காவிரி டெல்டா படுகையை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிப்பு.

4. தென் மாவட்டங்களில் இரு சக்கர வாகன ஓட்டிகள் மற்றும் கார் ஓட்டுநர்கள் 2019ம் ஆண்டில் ஹெல்மெட் மற்றும் சீட்பெல்ட் விதிகளை மீறியதற்காக ரூ. 224 கோடி அபராதம் விதித்துள்ளதாக காவல்துறை யினரிடம் கிடைத்த தகவல்கள்.

5. மஹாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு பகுதிகளில் மார்ச் மாதத்தில் சராசரி வெப்பநிலை இயல்பை விட 0.5- டிகிரிசெல்சியஸ் வரை அதிகமாக இருக்கும் என்று கணிப்புகள் காட்டுகின்றன.

6. மே மாதம் பெங்களூரு இஸ்ரோவில் நடைபெறவிருக்கும் இளம் விஞ்ஞானி திட்டத்தில் மாநிலத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் திறன் கொண்ட 9-ம் வகுப்பு மாணவர்களின் பெயர்களை பதிவேற்றுமாறு பள்ளி கல்வித்துறை இயக்குனரகம் மாநிலத்தில் உள்ள பள்ளிகளை கேட்டுக் கொண்டுள்ளது.




























Regd. with Registrar of News Paper
for India under No. TN TAM 18992 / 2009
Postal Registration No. TN/CB/137/2019-2021

Date of Publication 01.03.2020

# கிருபை வேதாகமப் புதையல் - V

இவ்வருடமும் வேதத்தினை நீங்கள் அறிந்து கொள்ளும்படி வேதாகமப் புதையல் வினாத்தாள் ஆயத்தமாகி விட்டது. விடுமுறை நேரத்தை பயனுள்ள வழியில் செலவழிக்க இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




**முன்பதிவுக் கட்டணம் Rs. 100/-மட்டுமே**

வினாத்தாள் ஏப்ரல் மாதக் கடைசியில் உங்கள் கைகளுக்குக் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்படும்

எங்கள் முகவரி

சகோதரி. **ஷீலா விஜயகுமார்**

கிறிஸ்து இயேசுவின் கிருபை

9A, கன்னியா நகர் (மேல்மாடி), கந்த கோனார் லே - அவுட்,
கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர் - 641 030.

செல் : 98427 22579, 99658 99555 E-mail : jesusgraceministries@gmail.com

Owned and Published by Sis. A. Sheela Packiaselvi, No. 10, R.K.N. Layout, North Street, Venkitapuram, Coimbatore - 13.
And printed at **GARUDA GRAPHICS**, 79, D.B. Road, R.S. Puram, Coimbatore - 641 002. Ph : 0422 2542555
Editor : Sis. A. Sheela Packiaselvi, Ph : 0422 2445255